[1979 மார்ச் 6]

தாம்பரபரணியின் குறுக்கே பாலம்

*வினா எண். 247—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாம்பரபரணி நதியில் சொரி முத்தையனார் கோவில் பக்கம் கட்டப்படும் பால வேலையின் மதிப்பீடு எவ்வளவு ?

(ஆ) பாலம் கட்டும் வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ரூ. 3·00 இலட்சம்.

(ஆ) 1978-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் நாளன்றே வேலை முடிவடைந்து விட்டது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் பதிலுக்கு நன்றி.

மூடப்பட்ட பஞ்சாலைகள்.

*வினா எண். 248— திரு. ஆர். மணிமாறன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு முடிய தமிழகத்தில் மூடப்பட்ட பஞ்சாலைகள் எத்தனை?

(ஆ) அவைகளில் திறக்கப்பட்டவை எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஐந்து.

(ஆ) ஐந்து.

மீனாட்சி மில் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்

*வினா எண். 249—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி மில் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குவதிலிருந்து விதிவிலக்குக் கோரியுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு யாது?